பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

20 07 2025 **SUNDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

- நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத்தொடர் சுமூகமாக நடைபெற எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.
- ரயில்வே கட்டமைப்பு வசதிகள் இதுவரை இல்லாத அளவிற்கு மேம்படுத்தப்பட்டு வருவதாக ரயில்வே இணையமைச்சர் திரு சோமண்ணா தெரிவித்துள்ளார்.
- டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையில் இந்தியா தொடர்ந்து முன்னணியில் உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.
- சர்வதேச நிலவு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.
- பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான உலக விளையாட்டுப்போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

--இனி விரிவான செய்திகள்---

<<<<<>>>>>>

நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத்தொடர் சுமூகமாக நடைபெற எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக, இன்று புதுதில்லியில் நடைபெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்திற்கு பின்னர் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு செய்தியாளர்களிடம் பேசினார்.

எதிர்க்கட்சிகள் பல்வேறு கருத்துக்களை தெரிவித்துள்ளதாகவும், அதனை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவை நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெறுவதை உறுதி செய்வதற்கான பொறுப்பு ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு உள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

சுயசார்பு இந்தியாவிற்கு அடித்தளமாக மேகாலயா திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் எழுதிய கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

<<<<<>>>>>>

இமாச்சலப்பிரதேசத்தில் ஏற்படும் இயற்கை பேரிடர்கள் குறித்து ஆய்வு செய்வதற்காக பல்துறை மத்தியக்குழு ஒன்றை ஏற்படுத்துமாறு உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா அறிவுறுத்தியுள்ளார்.

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம், மத்திய கட்டுமான ஆராய்ச்சி மையம், ஐ ஐ டி, ஆகிய நிறுவனங்களின் நிபுணர்களை கொண்டு இந்தக்குழு அமைக்கப்பட உள்ளதாக உள்துறை அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>>

நாட்டு மக்கள் அனைவரும் மரம் நடும் இயக்கத்தில் பங்கேற்க வேண்டும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

சமூக வலைளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், நாள்தோறும் மரக்கன்றுகள் நடும் உறுதிமொழியின் ஒருபகுதியாக இன்று புதுதில்லியில் மரக்கன்று ஒன்றை தாம் நட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

பூமியின் வளத்தில் மரங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் கூறியுள்ளார்.

இதனை கருத்தில்கொண்டு அனைவரும் மரக்கன்றுகள் நட வேண்டும் என்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>>

ஞாயிறு தோறும் சைக்கிள் பயிற்சி இயக்கத்திற்கு மாணவர்களிடையே ஆர்வம் அதிகரித்துள்ளாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

வாரணாசியில் உள்ள இந்து பல்கலைக்கழக வளாகத்தில் இன்றுநடைபெற்ற இயக்கததில் பங்கேற்று அவர் பேசினார்.

ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட கல்வி நிறுவன வளாகங்களில் இன்று இந்த இயக்கம் நடத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

உடல்நலனை சீராக பராமரிப்பதில் சைக்கிள் பயிற்சி முக்கிய பங்கு வகிப்பதாகவும் திரு மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<<>>>>>>

உடான் திட்டத்திற்கு எடுத்துக்காட்டாக ஹிண்டன் விமான நிலையம் திகழ்கிறது என்று சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

உத்தரப்பிரதேசத்தின் காசியாபாதில் செயல்படும் இந்த விமான நிலையத்திலிருந்து ஒன்பது நகரங்களுக்கான விமான சேவையை இன்று தொடங்கிவைத்து அவர் பேசினார்.

விமானப்படையுடன் இணைந்து 50 கோடி ரூபாய் செலவில் இந்த விமான நிலையம் மேம்படுத்தப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அகமதாபாத் விமான விபத்து குறித்த இறுதி அறிக்கை வெளியாவதற்குமுன் எந்தவொரு முடிவுக்கும் வருவது ஏற்புடையது அல்ல என்று திரு ராம்மோகன் நாயுடு கூறினார்.

<<<<<>>>>>>

ரயில்வே கட்டமைப்பு வசதிகள் இதுவரை இல்லாத அளவிற்கு மேம்படுத்தப்பட்டு வருவதாக ரயில்வே இணையமைச்சர் திரு சோமண்ணா கூறியுள்ளார்.

பூரி ரயில் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை இன்று ஆய்வு செய்த பின்னர் சமூக வலைதளத்தில் அவர் இக்கருத்தை பதிவு செய்துள்ளார்.

ரயில் நிலையங்களில் பயணிகளுக்கான வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாகவும் திரு சோமண்ணா தெரிவித்தார்.

<<<<<>>>>>>

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையில் இந்தியா தொடர்ந்து முன்னணியில் உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கடந்த மாதத்தில் மட்டும் 24 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை நடைபெற்றுள்ளதாக சர்வதேச செலாவணி நிதியத்தின் ஆய்வறிக்கையை சுட்டிக்காட்டி மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மாதந்தோறும் ஆயிரத்து 800 கோடி பரிவர்த்தனைகள் நடைபெற்று வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

நாட்டின் வாகன உற்பத்தி நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில், 22 சதவீதம் அதிகரித்துள்ளது.

இந்த காலக்கட்டத்தில் 14 லட்சத்து 57 ஆயிரத்து 461 வாகனங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதாக வாகன உற்பத்தியாளர்கள் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளன.

இது கடந்த நிதியாண்டின் இதே காலக்கட்டத்தில், 11 லட்சத்து 52 ஆயிரத்து 566-ஆக இருந்தது என்றும் அந்த புள்ளிவிவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் உள்ளிட்ட நடவடிக்கைகள் வாகன ஏற்றுமதி அதிகரிப்பிற்கு காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<>>>>>>**

சர்வதேச நிலவு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

மனிதன் முதன் முதலில் நிலவில் காலடி எடுத்துவைத்த நாளை குறிக்கும் வகையில் இந்த தினம் கொண்டாடப்படுவதாக இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியர் திரு த வி வெங்கடேஷ்வரன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***<u>Sound Byte - த வி – 50 Sec.)</u>***

**<<<<<>>>>>>**

ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு அரவிந்த் கெஜ்ரிவால், அக்கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் திரு சஞ்சய் சிங் ஆகியோர் குடியரசு துணைத்தலைவவர் திரு ஜெக்தீப் தங்கரை இன்று புதுதில்லியில் சந்தித்துப் பேசினர்.

இந்த சந்திப்பின்போது குடியரசு துணைத்தலைவரின் உடல்நலன் குறித்து கேட்டறிந்ததாக திரு அரவிந்த் கெஜ்ரிவால் சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

**<<<<<>>>>>>**

கேரளாவில் போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்மாநில அமைச்சர் திரு பி ராஜீவ் கூறியுள்ளார்.

இன்று எர்ணாகுளத்தில் இதுதொடர்பான ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

காவல், மதுவிலக்கு மற்றும் கல்வித்துறை ஒருங்கிணைந்து போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதாக அவர் கூறினார்.

போதைப்பொருள் பழக்கத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உரிய ஆலோசனைகள் நடத்தப்படும் என்றும், இதற்காக உயர்கல்வி நிறுவனங்களில் குழுக்கள் அமைக்கப்படும் என்றும் திரு ராஜீவ் தெரிவித்தார்.

**<<<<<>>>>>>**

ஜம்மு காஷ்மீருக்கு உடனடியாக மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு ஒமர் அப்துல்லா வலியுறுத்தியுள்ளார்.

ஸ்ரீநகரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநில அந்தஸ்து என்பது ஜம்மு காஷ்மீர் மக்களின் அடிப்படை உரிமை என்று கூறினார்.

ஜம்மு காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து வழங்கப்படும் என்று நாடாளுமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு உறுதி அளித்துள்ளதாகவும் திரு ஒமர் அப்துல்லா தெரிவித்தார்.

<<<<<>>>>>>

விமான கடத்தல் தடுப்பு ஒத்திகை பயிற்சி கொல்கத்தா விமான நிலையத்தில் நடைபெற்றது.

தேசிய பாதுகாப்புப்படையினர் இரண்டு நாட்களாக இந்த ஒத்திகையை மேற்கொண்டனர்.

இந்த ஒத்திகை பயிற்சியில் 75 பேர் பயணிகளாக பங்கேற்றனர்.

<<<<<>>>>>>

கர்நாடகா, மேற்குவங்கம், சிக்கிம், உத்தராகண்ட், தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்காலுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் கனமுதல், மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

பீகார், சட்டீஸ்கர், மத்தியப்பிரதேசம், மகாராஷ்ட்ரா, ஒடிஷா, தெலங்கானா, ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தில்லி மற்றும் புறநகர் பகுதிகளிலும் அடுத்த மூன்று தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான உலக விளையாட்டுப்போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

ஜெர்மனியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் பேட்மிண்டன் போட்டியில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

100 மீட்டர் மற்றும் 50 மீட்டர் நீச்சல் பிரிவில் இந்தியாவின் ஸ்ரீஹரி நட்ராஜ் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

----------------

உலக மாஸ்டர்ஸ் பில்லியர்ட்ஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Brijesh Damani** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

பக்ரைனில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், மனன் சந்திரா மற்றும் விஜய் **Nichani** வெண்கலப்பதக்கம் வென்றனர்.

---------

போர்ச்சுக்கல் சர்வதேச தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் முரளி ஸ்ரீசங்கர் தங்கப்பதக்கம் வென்றார்.

**Maia**-வில் நடைபெற்ற இப்போட்டியின் நீளம் தாண்டுதல் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

------------------

**Borneo** ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் லோகேஷ் சுப்பிரமணியன் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

------------------

ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் போட்டியின் கலப்பு குழு பிரிவு கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா – ஹாங்காங்கை வென்றது.

இந்தோனேஷியாவின் **Solo**-வில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் இரு அணிகளும் ஏற்கனவே காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன.

நாளை நடைபெறவுள்ள காலிறுதியில் இந்தியா - ஜப்பானை எதிர்கொள்கிறது.

--------

இந்தியா - இங்கிலாந்து இடையேயான இரண்டாவது இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல்நாள் ஆட்டம் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளது.

**Chelmsford** -ல் இன்று தொடங்கிய இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்துவரும் இங்கிலாந்து 2 விக்கெட் இழப்பிற்கு 18 ரன் எடுத்திருந்த நிலையில், மழையினால் ஆட்டம் தடைபட்டுள்ளது.

**<<<<<END>>>>>>**